# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW12

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணபாரதி | Caste | : |
| Father's Name | : சண்முகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16th october 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

**நான் குமராண்டி சாவடியில் வசித்து வருகிறேன் விவசாயம் செய்து வருகிறேன்.விஜயராணி என்பவர் எனது உடன் பிறந்த சகோதரி ஆவார்.ஆஜர் எதிரியை தெரியும் எனது அக்கா பள்ளிக்குச் சென்ற பொழுது பள்ளியில் வைத்து பார்த்துள்ளேன். ஆஜர் எதிரி பள்ளி தலைமை ஆசிரியராக உள்ளதாக எனது அக்கா என்னிடம் கூறியுள்ளார். எனது அக்கா என்னிடம் 2017 ஆம் ஆண்டு வாக்கில் கஸ்தூரிபா அறக்கட்டளைக்கு நிதி உதவி கொடுப்பதற்காக நானும், என் அக்காவும் கந்தசாமி பாளையம் சூர்ய பேக்கரிக்கு சென்றோம். கந்தசாமி பாளையம் சூர்யா பேக்கரியில் நானும் அக்காவும் சேர்ந்து மொத்தம் ரூ 8 லட்சம் பெரியசாமி இடம் கொடுத்தோம். மூன்று தவணைகளில் 8 லட்சம் கொடுத்தோம் 3 லட்சம் ஒரு முறையும் இரண்டாவது முறையாக மூன்று லட்சமும் மூன்றாவது முறையாக 2 லட்சமும் மேற்படி எதிரிக்கு கொடுத்தோம் அது மூன்று முறையுமே கந்தசாமிபாளையத்தில் உள்ள சூர்யா பேக்கரியில் வைத்து தான் கொடுத்தோம்.**

**மேற்படி பணம் 8 லட்சத்திற்கு ரசீது கேட்டோம் என் அக்கா கேட்டும் எதிரி கொடுக்கவில்லை என்பதால் இது சம்பந்தமாக எஸ்என் பாலசுப்பிரமணியிடம் சென்று நாங்கள் என் அக்கா புகார் கூறினார் அதன் அடிப்படையில் அவர் காவல் நிலையத்தில் புகார் கூறுமாறு சொன்னதால் என் அக்கா அரச்சலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக என்னிடம் சொன்னார் . இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நானும் எனது சகோதரி விஜயராணியும் சூர்யா பேக்கரியில் வைத்து பணம் கொடுத்தோம் என்று நிரூபணம் செய்வதற்கு அங்கு ஏதாவது தனிப்பட்ட சாட்சி உள்ளார்களா என்றால் இல்லை. எதிரிக்கு 8 லட்சம் கொடுத்ததாக சொல்வதை நிரூபணம் செய்ய மேற்படி காலகட்டத்தில் என்னிடம் 8 லட்சம் பணம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனது சகோதரி விஜயராணி

அவரது தந்தையிடமிருந்து பெற்ற 8 லட்சத்தை எதிரிக்கு கொடுத்தார் என்பதை அவருடைய வருமான வரி கணக்கில் காட்டி உள்ளாரா என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் 8 லட்சம் ரூபாய் மூன்று தவணைகளில் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் முதல் தவணை கொடுத்த பின்னிட்டு இரண்டாவது தவணை கொடுக்க உள்ள இடைப்பட்ட காலகட்டத்தில் அறக்கட்டளை தலைவர் எஸ் என் பாலசுப்பிரமணியத்தையோ அல்லது பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரையோ சந்தித்து மேற்படி தலைமை ஆசிரியர் பெரியசாமி அறக்கட்டளைக்கு நன்கொடை கேட்டார் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை.2016 ஆம் ஆண்டு பணி நிரந்தரம் செய்யப்பட்ட எனது சகோதரி எதிரி 2017 க்கு பின்பு அறக்கட்டளைக்கு பணம் கேட்டார் என கூறி பணம் கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்று சொன்னால் அறக்கட்டளைக்கு என்று பணம் கேட்டதால் தான் எனது சகோதரி கொடுத்தார். இந்த தொகை கொடுத்ததாக சொல்வதற்கு முன்பு என் சகோதரி அறக்கட்டளைக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் கொடுக்கவில்லை என் அப்பா தான் அறக்கட்டளைக்கு பணம் கொடுத்துள்ளார்.

2. பி எஸ் சி படித்துள்ள நான் எதிரி பணம் கேட்டு பின்னிட்டு அதற்குண்டான ரசீது கொடுக்கவில்லை என்பதை தெரிந்து அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் என் சகோதரியுடன் சென்று பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி எதிரி அறக்கட்டளைக்கு பணம் கேட்ட விவரத்தை அறக்கட்டளையின் தாளாளர் எஸ் எம் பாலசுப்பிரமணியத்திடம் அல்லது பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் இடமோ குறிப்பிட்டு இருந்தால் நான் பணம் கொடுக்கும் போது மட்டும் தான் என் சகோதரியுடன் சென்று மற்றபடி எங்கும் செல்லவில்லை. 8 லட்சம் பணத்தை நான் தான் கொண்டு வந்தேன். 8 லட்சம் பணம் நன்கொடை கொடுத்தால் யார் ரசீது தருவார்கள் என்றால் அறக்கட்டளையிலிருந்து தான் ரசீது தருவார்கள். தலைமை ஆசிரியர் ரசீது தர இயலாது என்றால் சரிதான்.எஸ்.சன் பாலசுப்பிரமணியம் தூண்டுதலின் பேரில் என் சகோதரி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 12:09:43 +0530

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Deposition of Witness of PW11

| | | | |
|---|---|---|---|
| Name | : சத்யா | Caste | : |
| Father's Name | : மாதேஸ்வரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16th october 2025.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆப்பகூடலில் குடியிருந்து கொண்டு ஈரோடு செங்குந்தர் கல்வி நிலையத்தில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் ஊராட்சி கவுன்சிலராக 2010 முதல் 2015 வரையான காலகட்டத்தில் இருந்த போது பொது வேலை சம்பந்தமாக மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் S.N.பாலசுப்பிரமணியம் அவர்கள் வீட்டிற்கு செல்வேன். அப்பொழுது அங்கு ஆஜர் எதிரி பெரியசாமி இருந்ததால் அறிமுகம் ஆகி எனக்கு பழக்கம் ஏற்பட்டது. கஸ்தூரிபா உயர்நிலைப்பள்ளிக்கு நன்கொடை வேண்டும் என்று என்னிடம் கேட்டார். எனவே நான் ஆஜர் எதிரி பெரியசாமிக்கு கொடுத்த பணத்தை என்னுடைய சித்தார் ஸ்டேட் பேங்க் வங்கி கிளையில் இருந்து பெரியசாமி கொடுத்த வங்கிகணக்கிற்கு முதலில் ஜூலை 2015 ல் ரூ.50,000மும், பின்னர் ஆகஸ்ட் 2015ல் ரூ.1,00,000மும் ஆக மொத்தம் ரூ.1,50,000 செலுத்தினேன்.

2. மேற்படி நன்கொடை கொடுத்த பிறகு சுமார் 1,2 வருடங்களுக்கு பிறகு நன்கொடை வசூல் செய்ததது அறக்கட்டளைக்கு செல்லவில்லை என எனக்கு தெரியவந்ததால் நான் உடனே மறைந்த S.N.பாலசுப்பிரமணியம் அவர்களை பார்த்து நான் நன்கொடை கொடுத்தது சம்பந்தமாக கேட்டபோது நன்கொடை எதுவும் வாங்குவதில்லை அதை தன்னிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னார். அப்பொழுது அவர் நன்கொடை வசூல் செய்ததது சம்பந்தமாக புகார் அளிக்குமாறு என்னிடம் சொன்னதால் S.N.பாலசுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு புகாரை எழுதி கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** மேலும் எனது வங்கிகணக்கு புத்தகத்தின் நகல் ரூ.50,000 செலுத்தியதற்கும், எதிரி சொன்ன வங்கிகணக்கில் ரூ.1லட்சம் செலுத்தி-யதற்கான வங்கி இரசீது மேற்படி புகாருடன் கொடுத்தேன். **அவைகள் முறையே அ.சா.ஆ.8, 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்கள் நகல் என்பதால் அதன் உண்மைத்தன்மை குறித்து அதனை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார்).**

3. மேற்படி நான் செலுத்திய நன்கொடையை அறக்கட்டளைக்கு செலுத்தாமல் எதிரியே வைத்துக்கொண்டது எனக்கு பின்னிட்டு தெரியவந்தது. இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் எம் பி இ டி மற்றும் எம் பீல் படித்துள்ளேன். நான் கஸ்தூரிபா மேல்நிலைப் பள்ளியில் பணி புரியவில்லை என்று சொன்னால் சரிதான். நான் ஆப்பக்கூடலில் உள்ள பள்ளியில் தான் பணி புரிந்தேன் என்றால் சரிதான். நான் ஆப்பக்கூடல் பள்ளியில் பணி புரிந்து கொண்டு யார் சொல்லி கஸ்தூரிபா பள்ளிக்கு நன்கொடை கொடுத்தேன் என்று சொன்னால், எனக்கு மேற்படி கஸ்தூரிபா அறக்கட்டளையின் தலைவர் எஸ் என் பாலசுப்பிரமணியம் அவர்களை நான் ஊராட்சி வார்டு கவுன்சிலராக இருந்த காலம் தொட்டு தெரியும் என்பதால் மேற்படி கஸ்தூரிபா பள்ளியின் தலைமையாசிரியராக எதிரி இருந்ததால் எதிரி என்னிடம் நன்கொடை கஸ்தூரிபா பள்ளிக்கு கேட்டதால் நான் எஸ் என் பாலசுப்பிரமணியத்திற்கு தகவல் தெரிவிக்காமல் எதிரி கேட்டதன் அடிப்படையில் நன்கொடை அளித்தேன்.நான் நன்கொடை வழங்கிய போது ஆப்பக்கூடல் பள்ளியில் எனக்கு சம்பளம் எவ்வளவு என்றால் அப்பொழுது நான் பள்ளியில் பணி புரியவில்லை விவசாயம் தான் செய்து வந்தேன்.

2. நான் அரசியலில் இருந்ததாலும் எஸ் என் பாலசுப்பிரமணியம் பள்ளியின் தாளாளர் என்பதாலும் எங்கள் இருவருக்கும் தான் பழக்க வழக்கம் என்றால் சரிதான். எஸ் என் பாலசுப்பிரமணியம் உடன் எனக்கு அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பு எதிரியுடன் அறிமுகம் உண்டா என்றால் இல்லை. நான் எதிரி என்னிடம் அறக்கட்டளைக்கு நன்கொடை கேட்டதால் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி நன்கொடை கொடுப்பதற்கு முன்பு அது சம்பந்தமாக எனக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான எஸ் என் பாலசுப்பிரமணியத்திடம் கேட்டேனா அல்லது அது குறித்து குறிப்பிட்டேனா என்றால் இல்லை நம்பிக்கையின் அடிப்படையில் தான் எதிரியிடம் கொடுத்தேன்.நான் எதிரி அறக்கட்டளைக்கு நன்கொடை கேட்டதால் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல அது உண்மைதான். என்னிடம் காட்டப்படும் ஆச 9 ஆவணத்தில் நான் எச் எம் கே ஜி ஜி எச் எஸ் என்ற முகவரியில் ஒரு லட்சம் அனுப்பியுள்ள நிலையில் இது யாருடைய வங்கி கணக்கு என்று சொன்னால் தெரியவில்லை மேற்படி எதிரி கொடுத்த வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைத்தேன் மீண்டும் ஐம்பதாயிரம் அனுப்பி உள்ளது நேரடியாக எதிரியின் பெயரில் உள்ள வங்கி கணக்கு அனுப்பினேன். மேற்படி ஆச 9 ஆவணத்தில் படித்த நான் முகவரி யாருக்கு அனுப்புகிறோம் என்று தெரியாமல் எவ்வாறு பணம் செலுத்தினேன் என்றால் தலைமை ஆசிரியர் கஸ்தூரிபா பள்ளி என்று குறிப்பிடப்பட்டிருந்ததால் அவர் கொடுத்த அந்த வங்கிக் கணக்கிற்கு நம்பிக்கையின் அடிப்படையில் அனுப்பினேன்.

3. நான் யார் என்று தெரியாத முகவரியே தெரியாத நபருக்கு வங்கிக் கணக்கிற்கு ஒரு லட்ச ரூபாய் செலுத்தியதாக சொல்வது மறைந்த எஸ்.என். பாலசுப்பிரமணியம் தூண்டுதலின் பேரில் பொய்யாக மேற்படி எதிரி குறிப்பிட்ட வங்கி கணக்குக்கு பணம் செலுத்தியதாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எச் எம் என்பது பள்ளியின் தலைமை ஆசிரியர் என்று சொன்னால் சரிதான். எச் எம் என்பது தனிப்பட்ட ஒரு நபரின் வங்கிக் கணக்கு அல்ல அது பள்ளி தலைமை ஆசிரியருக்கு உண்டான வங்கி கணக்கு என்ற விவரம் தெரியுமா என்றால் மேற்படி பணம் செலுத்தும் போது எனக்கு தெரியாது ஏனென்றால் நான் அப்பொழுது

ஆசிரியராக பணி புரியவில்லை.மேற்படி ஒரு லட்ச ரூபாய் எதிரி கொடுத்ததாக சொல்லும் வங்கி கணக்கில் கட்டுவதற்கு எனக்கு என்ன பொருளாதார வசதி உள்ளது என்றால் நான் என்னுடைய தோட்டத்தில் கரும்பு விவசாயம் செய்துள்ளதாலும் விவசாய குடும்பம் என்பதாலும் எங்களிடம் பணம் இருந்தது அந்த பணத்தில் தான் எதிரி குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு செலுத்தினேன்.

4. ஜூலை 2015 ஆம் ஆண்டு 50,000 ரூபாய் முதலில் எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் இரண்டாவது தவணையாக ஒரு லட்ச ரூபாய் ஆகஸ்ட் 2015ல் தான் நான் செலுத்தி உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் மேற்படி பெரியசாமி இடம் நன்கொடையாக 50,000 ரூபாய் கொடுத்த விவரத்தை நான் மறைந்த எஸ்.என். பாலசுப்பிரமணியத்திடம் தெரிவித்தேனா என்றால் இல்லை ஏன் தெரிவிக்கவில்லை என்றால் எதிர் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக இது சம்பந்தமாக நான் குறிப்பிடவில்லை.நான் பணம் செலுத்தியதாக குறிப்பிடும் வங்கி கணக்கானது பள்ளி தலைமை ஆசிரியருக்கு உண்டான வங்கிக் கணக்காகும் எதிரியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கு கிடையாது மேற்படி ஒரு லட்சம் செலுத்திய வங்கிக் கணக்கானது பள்ளியின் வங்கிக் கணக்காகும் அந்த வங்கிக் கணக்கிற்கு மறைந்த எஸ் என் பாலசுப்பிரமணியம் என்னிடம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நான் பள்ளியின் தலைமை ஆசிரியரின் வங்கிக் கணக்கில் தான் ரூபாய் ஒரு லட்ச ரூபாயை செலுத்தியுள்ளேன் எனவே நான் சொல்வது போல அது ஒரு லட்ச ரூபாயை எதிரியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் செலுத்தவில்லை என்று சொன்னால்,சரியல்ல எதிரி என்னிடம் கொடுத்த வங்கி கணக்கில் தான் ஒரு லட்ச ரூபாய் செலுத்தினேன் மேற்படி ஒரு லட்ச ரூபாய் செலுத்தியது எஸ் என் பாலசுப்பிரமணியத்திற்கு தெரியாது அவர் என்னிடம் எதை கூறியும் தூண்டுதல் செய்யவில்லை.

5. எஸ் என் பாலசுப்பிரமணியம் என்னிடம் கூறியதன் அடிப்படையில் தான் நான் பெரியசாமியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு 50 ஆயிரம் ரூபாய் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் மேற்படி எஸ் என் பாலசுப்ரமணியம் என்னிடம் கூறவும் இல்லை நான் எதிரி சொல்லியதன் பெயரில் தான் அவரது வங்கி கணக்கில் செலுத்தினேன். நானும் எஸ் என் பாலசுப்பிரமணியமும் அரசியல்வாதிகளாக இருப்பதால் நான் மேற்படி பாலசுப்பிரமணியத்திற்கு தெரியாமல் அறிமுகம் இல்லாத தெரியாத நபரான எதிரியிடம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அவர் சொல்லிய வங்கிக் கணக்கில் செலுத்தியதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு லட்சம் செலுத்தியதாக சொல்லும் வங்கி கணக்கானது எதிரியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கல்ல அது பள்ளி தலைமை ஆசிரியரின் வங்கிக் கணக்காகும் எனவே நான் செலுத்தியது பள்ளியின் வங்கிக் கணக்கில் தான் என்று சொன்னால் எனக்கு பள்ளி வங்கிக் கணக்கா அல்லது தனிப்பட்ட வங்கிக் கணக்கா என்பது தெரியாது எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் கொடுத்த இரண்டு வங்கி கணக்குகளில் நான் பணம் செலுத்தினேன். மேற்படி எதிரி என்னிடம் இரண்டு வங்கி கணக்குகளில் பணம் வாங்கி ஏமாற்றி விட்டார் என்று குறிப்பிட்டு நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. நான் ஆப்பக்கூடலில் பணிபுரிந்து வரும் சூழ்நிலையில் பள்ளிக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத சூழ்நிலையில் எஸ் என் பாலசுப்பிரமணியம் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் புகார் கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்று சொன்னால், மேற்படி நான் கொடுத்த நன்கொடை உரிய வகையில் அறக்கட்டளைக்கு சென்று சேராத காரணத்தினாலும் நான் கொடுத்த பணம் எனக்கு திரும்ப வேண்டும் என்பதற்காக தான் மேற்படி புகாரை நான் கொடுத்தேன். இந்த பணம் கொடுத்ததாக சொல்லும் காலத்திற்கு முன்பு அறக்கட்டளைக்கு

நான் பணம் ஏதாவது கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நானும் பாலசுப்பிரமணியமும் சேர்ந்து எதிரி மோசடி செய்து விட்டார் என்று வழக்குக்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 12:18:30 +0530

Taken down by me/before me in the presence of the accused in open court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

District Munsif cum Judicial Magistrate,
Elumathur Village in Modakurichi Taluk.